"ஆசிரியர் வெளியீடு எண். 3."

உ

முருகன் துணை.

உடையார்பாளையம்

போர்டு உயர்தரக் கலாசாலைச் சாரணர்

# உலாக்குழூக்காட்சிக்கும்மி.

---

இஃது

ஷை கலாசாலைத் தமிழாசாரியர்

திரு. பொன். சாமிநாததேசிகர்

அவர்கள் இயற்றியது.

---

திருவிடைமருதூர்

ஸ்ரீ பிரஹத்சுந்தர குசாம்பிகா அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பெற்றது.

பிரசோற்பத்தி-௵ ஐப்பசி-௴

முருகன் றுணை.

# உலாக்குழூக் காட்சிக் கும்மி.

கும்மியடியிளஞ் சாரணர்காள்கூடிக்
கும்மியடியிளஞ் சாரணர்காள்!!
விம்மிதமாமுலாக் காட்சிக்குழூவின்சீர்
விந்தைதனைச்சொல்லிக் கும்மியடி

தொந்திக்கணபதிச் சுந்தரக்கந்தனும்
தோன்றுஞ்சிவனரி தேவர்களும்
முந்துந்துணையென முற்றனுளைப்பாடி
முன்னடியைநாடிக் கும்மியடி

கொண்டமகிழ்ச்சியிற் கூடிவிளையாடிக்
கொல்லாமைப்பாடலும் பாடித்திருத்
தொண்டத்தொகையுடன் நாட்டுப்பாடற்பாடி
தோலாத சாரணர்ப் பாடற்பாடி

நம்முடையார்பாளை யந்தனினின்றுமே
நாமெல்லோருஞ்சென்ற காட்சிதனை
அம்மம்மவென்றுரு மாச்சரியம்பெற்ற
அற்புதங்கள்சொலிக் கும்மியடி

கும்மியடியிளஞ் சாரணரெல்லோருங்
கூடிக்குதித்துமே கும்மியடி
செம்மைபெறவாடிப் பாடியிறையருள்
தேடிவிளையாடிக் கும்மியடி 5.

ஓங்கும்புகழுடை யார்பாளையந்தனி
ஒற்றஜில்லாபோர்டுப் பள்ளிக்கூடம்
ஆங்குயர்சாரண ராமிளஞ்சாரண
ஆகுங்குழுவினர் அப்துல்ஹபீஸ் 6.

செப்புங்கந்தசாமி யுங்கலிராஜலு
சேர்சாமிநாத னிராமராவும்
அப்பாத்துரைதிரு நாவுக்கரசுட
னருங்கலியாண சுந்தரமும் 7.

சுப்பையனேடொன்பான் பையன்களுமாகத்
தோன்றியமூன்றும்பா ரத்தினரும்
ஒப்பியசந்திர சேகரன்சேதுராவ்
ஒகைப்பெருமாள ரங்கநாதன் 8

என்றிடுநால்வரி ரண்டாம்பாரத்தினில்
எங்குங்களைப்பிலா அப்துல்கபூர்
துன்றுங்கலியாண சுந்தரம்தன்னுடன்
சொல்விளங்குஞ்சித பாதமுமே 9.

மூவர்முதற்பாரப் பையன்களாமன்றி
முன்னியதங்கவே லென்னொருவன்
ஆவனைந்தாம்வகுப் பென்றேயறைகுவர்
ஆசிரியர்நால்வர் கீழ்க்குறித்தோர் 10

தண்டமிழாசானுஞ் சாமிநாதப்பெயர்ச்
சாற்றியதேசிகர் தன்னுடனே
கொண்டவுதவிநல் லாசிரியரெனக்
கூறும்பத்மநாப ராயருமே 11.

நல்லிளஞ்சாரண ராசிரியரெனு
நன்மணிகண்டே சுவர அய்யர்
கொல்லாபுரஞ்சீனி வாசம்பிள்ளையெனக்
கூறுமுதவிநல் லாசிரியர் 12.

என்றிடுநால்வரு மேய்பிரமோதூத
ஏர்மதிதையிரு பத்துநான்காய்த்
தூன்றுதெய்திமாலை மூன்றுமணியுறச்
சொற்றிடுந்தலைமை ஆசிரியர் 13.

பெரும்மகாலிங்க மய்யர்யக்ஞமய்யர்
பேசுமுதலுதவிக் கணக்கர்
தேரும்பாலசுப்ர மண்யவய்யரெனச்
செப்புமுதவிநல் லாசிரியர் 14.

ஒவியவாசானு ராவமுதய்யங்கார்
உற்றவின்னோர்கள்தாங் கூடிநின்ற
மேவியகாட்சிப் பெருமைகள்கண்டிட
மேலான ஆசி மொழிபுகன்று 15.

போய்வாருங்களென நன்னயமாமொழி
போதித்தும்பண்டை மேன்மைதர
வாய்வருமோர்பாடற் சொன்னார்விடைபெற
வண்டமிழாசான் வகைவகையாய் 16.

வாய்ந்தசெட்டித்தெரு வேருங்கடைவீதி
வந்தேசமஸ்தானத் தன்னைவாழ்த்தி
ஆய்ந்தமாலையெனும் பத்திரிகையாசான்
அன்பார்சமஸ்தான வாசிரியர். 17.

ஆயசுவாமிநா தய்யரவர்களின்
ஆதியுற்றோரவர் தன்னைவாழ்த்தி
நேயர்திவான்சேஷய் யங்காரினுசிக்கு
நீடிடவாழ்த்திச் சமஸ்தானம் 18.

அன்பிற்குரியவர் கிருஷ்ணமூர்த்திஅய்யர்
அன்னவராசிக்கும் வாழ்த்துச்சொல்லி
இன்புசெய்டாக்டாரம் வேங்கடாராமய்யர்
என்பவராசிக்கும் வாழ்த்துச்சொன்னோம் 19.

அங்கேயரிய ராலயங்கள்தொழு
　தாருங்காண்டபமாந் தீர்த்தக்கரைத்
தங்குந்தெருவுடன் வேளாளரின்றெருத்
　தான்றபாலாபீஸ் தலைவரவர் 20.
அன்னவர்மேலதி காரியுடனுசி
　யன்போடுரைத்திட வாழ்த்துச்சொலிப்
பின்னுயருங்குணச் செம்மலாஞ்செட்டியார்ப்
　பேசுமருணா சலப்பெரியார் 21.
அக்கடைஏஜண்டு பூவராகாசாரியா
　ராகுமறிஞ ருடனுசி
தக்கவாசெய்திட வாழ்த்துக்கள்சொல்லியும்
　சார்ந்திடும்வைத்யநா தய்யருடன் 22.

முத்துவேற்செட்டியா ரோடுந்தலைவெட்டி
　முற்கோவிந்தபடை யாச்சியொடும் (ம்
ஒத்தாரையும்வாழ்த்தி யூர்தாண்டிச்சென்றிட்டோ
　ஓங்குங்கடைவீதி யின்வழியே 23.
சயங்கொண்டசோழ புரஞ்செல்லுமவ்வழி
　சார்ந்தார்மோடாரிலோ ராசிரியர்
முயங்கிடுஞ்சாரண ராசிரியரவர்
　மொழிந்திடுவெரம்மெஸ் பரலெனவே 24.

அன்னாரையும்வாழ்த்தி யன்பாய்விடைபெற்றோம்
அவ்வழியேசெல்லுங் கூலியாட்கள்
முன்னேயென்னபடஞ் சொல்லுங்களென்றிட
மொய்த்தனராண்டுப் பலபேர்கள் 25.

கொல்லாமையின்படந் தன்னையெங்குந் தூக்கிக்
கொண்டுவந்தோன்மூன்றும் பாரப்பையன்
கொல்லாபுரத்தி னிலக்குவனுந்தமிழ்க்
கொஞ்சுங்குறள்வகுப் புற்றவனும் 26.

கொல்லாமையின்பட மாட்சிதெரிவுறக்
கூறினர்செந்தமி ழாசிரியர்
செல்லுநெறித்தஞ்சை பேதுருகலாசாலைச்
சேரும்பிரின்சிபால் லாம்புதுரை 27.

செய்தியெலாங்கேட்டே யன்றுசயங்கொண்டந்
தீவிழவின்வந்தே தான்மகிழ்ந்தார்
எய்திலோகல்பண்டுச் சத்திரத்திற்றங்கி
யேயுமாவேரி யினிலுண்டோம் 28.

ஒப்பிலரவன்புட னந்நீர்க்கரையுண்டவ்
வோங்குமகிழ்ச்சி யெவர்பெறுவார்
உப்புப்புளிச்சாமான் கண்ணுச்செட்டிக்கடை
யுற்றுமேவாங்கி யுறங்கலுற்றோம் 29.

MAHAMAHOPADHYAYA
DR. U.V. SWAMINATHA IYER LIBRARY

கேட்டவுடன்சுகா தாரமேற்பார்வையர்
கேடில்மருந்தன்பு டன்கொடுத்தார்
மீட்டுங்காலப்புத்த விக்கிரகங்களை
வீதிகளிற்கண்டு மங்கிருந்தே 30.

எல்லோருமானந்த மாகவேபாடல்கள்
எங்குமிளைப்பின்றிப் பாடிச்சென்றே
கல்வியபொன்னேரி தன்னைக்கண்டோங்குரு
காவலப்பர்கோயி லுஞ்சார்ந்தோம் 31.

மன்னன்மனைவிதி ருப்பணியாங்கோயில்
வடகலைமரகத வல்லித்தாயார்
பன்னியவீரநா ராயணராமிறை
பார்க்கவதீர்த்த மதன்வடக்கே 32.

அங்குவெள்ளியவர் சாபவிமோசனம்
அம்மைபிறப்பிடம் பத்மதீர்த்தம்
துங்கத்திருமுனர்ச் செட்டிக்குட்டையென்பர்
தோன்றிடுங்கிருஷ்ண நதிவடக்கே 33.

சேர்மனூரியவு மாளவர்தாராட்சி
சூழ்ந்தவரன்னவர் மூழ்குதுறை
ஆமவர்கூர்வாழி தீர்த்தக்கரையினி
லாருமரண்மனை யேய்ந்ததென்பர் 34.

காணுநாதமுனி சித்தியிடங்குரு
காவலப்பர்க்குநல் யோகசித்தி
மாணுக்கிருகா டடைந்ததுமங்கேதான்
மாருதிகையில்வி சேடமொன்றும் 35.

மேதகுநாத முனியின்குழந்தைபால்
வில்லியன்வில்லிச்சி போனரென
வேதம்புகழுமி ராமனறிந்திட
மேலுங்கிழாங்கை மகக்குறித்தே 36.

வாய்ந்ததென்பர்புக ழோடுமொளிமிக
வானவரன்பி னனுப்பிவைத்தே
ஏய்ந்திடுங்கல்யாண கோடிவிமானத்தி
லேய்குவர்நற்று யுடன்பெருமாள் 37.

ஏய்ந்தநாதமுனி ஆளவந்தாருட
னீடில்குருகாவ லப்பருமே
வாய்ந்திடுந்தேசிகர் கீழ்பாலிருதியாய்
மாண்பின்வடபா லமைந்தனரே 38.

உலகளந்தசோழன் மாளிகைக்குமுயர்ந்
தோங்கியஆவடை யார்க்குமன்றி
இலகுங்குருகாவ லப்பர்கோயிலுக்கு
மேய்ந்திடுஞ்சுரங்க மொன்றுளதாம் 39.

மீளவுமங்கிருந் தெல்லோருமாகவே
மேவுமிளைப்பற வேநடந்தே
சோளனல்லிராச ராசசோழன்புகழ்
சொல்லுங்கங்கைகண்ட சோழபுரம் 40.

சார்ந்ததும்முன்சென்று சீனிவாசம்பிள்ளை
தான்காலையுண்டிக் குரியசெய்தே
ஆர்ந்தனர்ந்தமி ழாசான்பலபொரு
ளாய்ச்செப்பமாணவர்க் கொண்டுசெய்தார் 41.

ஆசிரியர்மணி கண்டேஸ்வரவய்ய
ராமிராயசவ ரட்டில்செய்த
பேசியஉப்புமாத் தேங்காயின்சட்டினிப்
பெய்மணமுட்டிநா நீர்சுரக்கக் 42.

கம்மெனச்செய்யெலு மிச்சம்பழச்சாறேப்
காயங்கருவேப் பிலைநீர்மோர்
அம்மம்மாஅப்பசிக் காரசவமுதென
ஆரப்பெரிதுண் டகமகிழ்ந்தோம் 43.

உப்புமாக்கிண்டிடப் பாத்திரம்விட்டுட
னுற்றவுதவிக ளாவணவும்
அப்போதிராயர்க் கணக்குப்பிள்ளையுட
னார்க்கோரரிய வுதவிசெய்தார் 44.

ஆண்டுயர்பீரங்கி மேடுங்கண்டேதிரு
வாலயஞ்சிங்க முகக்கிணறு
பூண்டொருகல்லின வக்கிரகங்களும்
போற்றிப்பெருவுடை யார்விடையார் 45.

ஆகுயர்பேருரு ஆலயநற்சிற்பம்
ஆசிலுயர்கோ புரத்திலமர்
வாகுடனோர்கல்லில் மாணுயர்வைந்தடி
வார்ந்தது நான்கடி நால்விடைகள் 46.

ஈராயிரங்கர மோராயிரஞ்சிர
மீடிலாவாணா சுரன்பூசைப்
போராயுறக்கங்கை கண்டானெனப்புகழ்
பேசுவர்பாங்கின் சிறுகோயில் 47.

அந்நாளரையன்தி ருப்பணியின்கணக்
காய்விலாமந்திரிக் காயெழுதும்
தந்நாயகமெனும் பிள்ளையார்கோயிலுந்
தான்கண்டோமங்குசிற் சிற்றூர்கள் 48.

அன்னதன்பேர்சொலு மெய்க்காவற்புத்தூரி
லக்காவற்கார ரிருந்ததனை
முன்னமேசொர்க்கப் பனையெரிந்தவிடம்
மொழிகுவர்சொக்கப்பள் ளம்மெனவே 49.

பள்ளியறையிடம் பள்ளியோடையாகும்
  பகர்ந்திடும்வாணதி ரையன்குப்பம்
கிள்ளூர்வரணஞ்செய் வெர்திருந்தாரென
  மேலுந்திருப்பணி செய்தருளிக் 50.
காட்டுஞ்செங்கல்மேடு மண்மலைநீர்த்தேக்கிற்
  கால்ஸ்டாசங் கொண்டான்தொட்டிக்குளம்
மூட்டுஞ்சுரங்கப்புக் குழிமுதற்சொல்லலாம்
  மூன்சோழராச னிருந்தவிடம் 51.
உட்கோட்டைமாளிகை மேடுமூன்கூறிட
  ஞ்சற்றவிராயகர் நற்சிவனார்
வெட்டிவிண்ணோர்துதிக் கோயில்கண்டோஞ்சிற்ப
  மேன்மைமையெக்காடு மேபுகழும் 52.
பின்னர்க்கொல்லாபுரஞ் சென்றுநீர்மோருண்டு
  பேசும்பகலுணவார்ந்தோமங்கே
முன்னர்ச்செய்தார்சுப்ர மண்யபட்டரவர்
  மூட்டுமடைத்தொழி னல்லுதவி 53.
ஆசிரியர்களுங் கூடச்சமைத்தேதகல்
  லருமைக்கத்தரிக் காய்சாம்பார்
ஏகிலாவாழைக்காய் நற்கருணையாகும்
  எல்லோருமேவயி றாரவுண்டோம் 54.

மற்றுதவிசெய்தோர் சுப்பராயபிள்ளை
வாசுதேவபிள்ளை கிருஷ்ணபிள்ளை
குற்றமில்சாரணர்த் தீவிழவன்றிரக்
கொல்லாபுரம்பிள்ளைப் பாளையத்தில் 55.

பிற்றைநாட்காலையி னிலைபாமல்லி
பேசமவ்வேலை பொருந்திருந்தோம்
சத்ருமயூராமல் சார்ந்தோமணைக்கரை
தாங்கும்பொதிசோறு தானவிழ்த்தே 56.

அங்கமைந்தநாவை யோடுகாலையுண
வாற்றிசேயுண்டே யமர்ந்திருந்தோம்
பங்கமறத்தமி ழாசானறிவுறப்
பன்மொழிகூறிக் குறைமுடிந்தார் 57.

பின்னைநம்பள்ளியின் வாசிக்குமவ்வூரன்
பேசுமுருகையன் பேருதவி
தன்னுலேபார்த்திச மாதியபெற்றிளஞ்
சாரணவாசா னுடிசாயர் 58.

ஆகுமாரகிரியர் நாகன்சமைக்கத்தமி
ழாசான்பலபொரு ளுந்தேடி
நாகுருமருங்கைக்காய்க் கொல்லைசென்றுவாங்கி
நல்லவுருளைக்கி முங்குள்கொண்டு 59.

வந்துவெங்காயம்பச் சைமிளகாயுடன்
வண்காயவாசனை குமுகுமென
முந்துமுருங்கைக்காய் சாம்பார்மிகச்சுவை
மொய்புருளைக்கிழங் கின்பொடிமாஸ் 60.

மூக்கடைக்கமணம் நாக்கடைக்கச்சுவை
முட்டும்வயிறுயர்ந் தேபுடைக்கத்
தேக்கமுறநடைக் காக்கமுறவுணச்
செம்மைபெறச்செய லாற்றிநின்றோர் 61.

ஆற்றில்மூழ்கும்வேளை போட்டோபிடித்திட
மாசாவமுதய்யங் காரும்வந்தே
ஏற்றதுமுண்டியெல் லோருமணைக்கரை
யேற்றிநிறுத்திப்ப டம்பிடித்தார் 62.

அப்பகல்மூழ்கிடு மவ்வேளைதன்னிலே
யாற்றின்பிரிவைய ணைந்துகண்டோம்
திப்பியமாய்மூழ்கிச் சென்றருந்திதுயிர்ச்
சேரும்பொதிசோற்று மூட்டைகட்டிப் 63.

பாத்திரபண்டங்க ளங்கங்கேசேர்ப்பித்துப்
பாலக்கரைசென்றோம் பார்த்திடவே
நீத்தமேற்பார்வைய நுத்தரவும்பெற்று
நீரையடைத்துத்தி றப்பதனின் 64.

எந்திரங்கண்டுந டந்துமுன் றுஜில்லா
வெல்லையுங்கண்டே யகமகிழ்ந்தோம்
தந்திரமாகவ ருந்திவழிதாண்டிச்
சார்ந்தோமுட்கோட்டைதா னன்றிரவே 65.

ஆங்கேகுளக்கரை யாய்ந்தடைந்தேயமு
தார்ந்தோமவ்வேளை யவணிருந்த
தாங்கருட்பார்ப்பனப் பாட்டிமிக்கன்புடன்
தந்தனர்மோர்மிள காய்வறுத்தே 66.

அவ்வேளையாயிர மாயிரமாம்பொரு
ளள்ளிக்கொடுப்பினு மேதகுமோ
செவ்வேபின்தீவிழாச் செய்தங்கேதிண்ணையில்
சேர்த்துறங்கிக்காலை யினெழுந்தே ·67.

மன்னரின்மாளிகை கண்டுகற்கள்கொண்டு
வந்தோங்குருகாவ லப்பர்கோயில்
அன்னவிடத்திலே தங்கள்முறைப்படிக்
காபதன்னுட்கட னாற்றிநின்றேம் 68.

ஆண்டரசமாளி கைச்செங்கலேழரை
யங்குலமாயகன் றேங்கல்நான்காய்
நீண்டொன்றேகாலடி மேலும்பெரியன
நீடுமிதிற்சிறி தும்பெரிதும் 69.

முன்னைநாளிற்சொலி வைத்தபடியங்கே
மோர்த்தயிரன்னந்து வையலுடன்
நன்னயமாந்துரை சாமிபின்னையவர்
நாடுந்தயவின மைத்தளித்தார் 70.

அவ்வுணவுண்டேபின் சுவாமிதரிசனத்
தப்புறம்பட்டர்வி ருப்பப்படி
ஒவ்வியேரர்புத்தகத் தொப்பமிட்டாரெங்க
ளோங்குயர்ராங்கா சிரியர்களும் 71.

ஆண்டிருந்தேஜயங் கொண்டம்வந்தோமவ
ஞரும்பக்கிரிகிருஷ்ண நாயுடுகாரு
பூண்டிடுமன்பித் பெருமாள்கோயிற்பட்டர்
பூசுரர்தன்னைச்ச மைக்கச்செய்தார் 72.

அவ்விடைவேளை யடங்காப்பசிக்கென
ஆளுக்குமூன்றுக வாழைப்பழம்
ஒவ்விச்சுவைத்த துடன்புளியஞ்சாத
மொவ்வோர்வடையி னுடனேயுண்டோம் 73.

உண்டதுமூட்டைகள் தண்டிற்றொங்கவிட்டே
ஓதுடையசர்பானை யத்தடைந்தோம்
விண்டனாவ்வேளை யெட்டுமணியென
வீட்டினிற்சேர்த்திடப் பெற்றனமே 74.

ஆறுகள்சோலைகள் கோயில்களற்புத
மாகும்பறவைகள் மக்கணிலைப்
பேறுகளுங்கண்டேம் பின்னையொருநாளப்
போமகிழ்ச்சிபி றந்திடுமோ 75.

இந்தவுலாக்குழுச் சென்றுவரும்வரை
யைந்தவுணவிற்க ரிசியெலாஞ்
சொந்தமாய்த்தான்செல விட்டார்கொல்லாபுரத்
தோன்றல்சீனிவாசம் பிள்ளையவர் 76.

இன்னுமுதவிகள் தான்செய்திராவிடி
விந்தவுலாக்குழு வேகடவா
அன்னவர்க்குமீசன் வேண்டுமெருட்செய
லாற்றிடக்கும்மி யடித்திடுவோம் 77.

வாழியநம்முடை யார்பாளையப்பள்ளி
மர்ணவர்சாரணர் வாழியவே
வாழியநம்பள்ளி யாசிரியர்களும்
வாழியவர்மொழி வாழியவே 78.

வாழியெங்கள்பள்ளிக் கூடம்வளர்நெறி
வாய்க்கவுயர்கலா சாலைசெய்தே
வாழிகச்சிசின்ன நல்லப்பநந்துரை
வாழியபள்ளிவ ளர்க்கருத்தே 79.

வாழிதமிழகம் வாழிதமிழ்மொழி
வாழியசெந்தமிழ் வண்புலவர்
வாழிகுறள்வகுப் போடுகொல்லாநெறி
வாய்ந்தவுலாக்குழு வாழியவே 80.

Excursion party 7—2—1931.

---

## மகாத்மா காந்தியடிகள் அன்பிற்குரிய இந்திப்பாடற் றமிழ் மொழி பெயர்ப்பு.

---

### வெண்பா.

அன்பினைய லாரிடரை யாய்ந்துதவி செய்திமெவ்-
வின்பினரே மெய்யன்பர் எய்ந்துதவி—முன்புசெயும்
போதி லெவர்செருக்குப் பூணாரோ அன்னவரே
நீதிலுய ரன்பரெனத் தேர் 1.

ஏவருல கில்வாழும் எல்லோரை யும்வணங்க
லாவரவ ரேயுயரு மன்பரவர்—ஏவர்
ஒருவரையுந் தானிகழா வுத்தமரன் னோரே
ஒருவின்மெய் யன்பரென வோர் 2.

தோயுமுளஞ் சொற்செய்கை தூநெறியில் மாறாமல்
ஓயுநெறி காப்பவரே உள்ளன்பர்—ஏயுமெவர்
எல்லோரை யுமொன்றா யெண்ணிடுவ ரோஅவரே
நல்லன்ப ரென்ன நவில் 3.

ஈங்காசை நீக்கியய லில்லாளைத் தாயெனவே
ஓங்குமொழி பொய்யே உரையாமல்—பாங்கினரின்
தொக்கபொரு ளைக்கையால் தொட்டிடவுங் கூசுமனத்
தக்கவரே மெய்யன்பர் தாம் 4.

மோகமுடன் மாயையுமே முன்னொழுக்க மின்றிமனத்
தேகநல்லை ராக்கியந்தா னெய்தினரோ—மாகமுயர்
மெய்யன்பர் ஆண்டவன்பேர் மென்செவியிற் கேட்டது
மெய்மறப்பா ரன்பரெனல் மேல் 5. (மே

ஏவருலோ பங்கபட மில்லாதே யாசைசினம்
பாவமிலை யென்றதனைப் பாற்றினரோ—ஆவரவர்
மெய்யன்ப ரென்னிந்தி மெய்ப்பாடற் காந்திமுனி
செய்யன்பு சேர்ந்தபுகழ்ச் சீர் 6.

---

(இவை இயற்றினோரும், இந்நூலாசிரியரே.)

ஸ்ரீ பிரஹத்சுந்தர குசாம்பிகா பிரஸ்,

திருவிடைமருதூர்.

நமது அச்சாபீஸில் சிறிய கார்டுமுதல் பெரிய பத்திரிகைகள், புஸ்தகங்கள், இன்னும் அநேகவித வேலைகளும் வெகுநேர்த்தியாக குறைந்த சார்ஜுக்கு குறித்த காலத்தில் அச்சிட்டுத்தருவதோடு, பைண்டு வேலைகளும் சுத்தமாக செய்து தரக்கூடும்.